**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 398/2019 PW . 1**

**பெயர் : மதுவரன்** **தந்தை/கணவர் பெயர்: ராமநாதன்**

**ஊர் :** **தாலுகா:**

**வயது :** **தொழில்:**

**ஜாதி :** **சமயம்:**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.04.2025

---

**(2ம் எதிரி இறப்பு. 1, 3 எதிரிகள் ஆஜரில்லை. 1, 3 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**<u>09.04.2025 முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது ஆலம்பட்டியில் குடியிருக்கிறேன். மருத்துவ முதுநிலை படிப்பு படித்து முடித்து இருக்கிறேன். தொடர்ந்து படித்து வருகிறேன். 1வது எதிரி எனக்கு பங்காளி முறை வேண்டும். இறந்த 2வது எதிரி 1வது எதிரியின் மனைவி. 3வது எதிரி 1வது எதிரியின் மகள். 26.03.2019ம் தேதி காலை 11 மணியளவில் சர்வேயர் மற்றும் உதவியாளர் எங்கள் இடத்தை அதை ஒட்டியுள்ள ரோட்டையும் அளவீடு செய்வதற்காக வந்துள்ளார்கள். மாலை 3 மணி வரை அளப்பதற்காக முயற்சி செய்துவிட்டு எல்லைக்கல் தேடி கண்டுபிடிக்க முடியாததால் பின்வரும் நாளில் அளவீடு செய்யலாம் என்று முடிவு செய்துவிட்டு சர்வேயர் மற்றும் உதவியாளர் சென்றுவிட்டார்கள். பின்னிட்டு சுமார் 4 மணிக்கு 1வது எதிரி மற்றும் அவரோடு வேலை செய்யும் மற்றொருவர் (பெயர் தெரியவில்லை) ரோட்டின் பகுதியை அளந்தார்கள். ஏற்கனவே வழக்கு இருப்பதால் சட்டப்படி தான் அளக்கவேண்டும் என்று எனது அப்பா இராமநாதன் சொன்னார். எனது அப்பா சொன்னதை கேட்டகாமல் 1வது எதிரி மற்றும் மேற்சொன்ன நபர் அளந்தார்கள். அதை எனதுஅப்பா தடுத்ததற்கு எனது அப்பாவை 1வது எதிரி கீழே தள்ளிவிட்டு அடித்து தாக்கினார். உடனே தடுக்க சென்ற எனது அம்மாவை 3வது எதிரி சுஹாசினி மற்றும் அவரது தாயார் 2வது எதிரி கீழே தள்ளிவிட்டு கல்லால் எனது அம்மாவை தாக்கி காயம் ஏற்படுத்தினார். எனதுஅம்மாவிற்கு தலையில் காயம் ஏற்பட்டது. எனது அப்பாவிற்கு வெளிக்காயங்கள் இல்லை.

2. மேலும் எனது அப்பா, அம்மாவை அடித்த போது 1வது எதிரி உங்களை கொல்லுவோம் என்று சத்தம் போட்டு அச்சுறுத்தி கல்லை எடுத்து வீசினார். கல் எனது அப்பாவின் காலில் பட்டது. எனது அம்மாவையும், அப்பாவையும் திருப்பத்தூர் அரசுமருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துசென்றோம். அதன் பிறகு தகவல் அறிந்து 29.03.2019 அன்று எஸ்வி.மங்களம் காவல்நிலையம் சென்று எனது அப்பா, அம்மா காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் இருந்ததை கூறி தகவல்தெரிவித்தேன். ஏன் நேரடியாக மருத்துவமனைக்கு வந்து புகார் எடுக்கவில்லை என்று கேட்டேன். போலீசார் அதற்கு முறையாக பதிலளிக்கவில்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யமறுத்தார்கள். அதன் பிறகு மாவட்ட கண்காணிப்பாளரிடம் சென்று முறையீட்டதன்

அடிப்படையில் நான் கொடுத்த புகாரை காவல் துணை கண்காணிப்பாளரிடம் கொடுக்க சொல்லி என்னை அனுப்பி வைத்தார்கள். நான் கொடுத்த அந்த புகாரில் வழக்கு பதிவு செய்யவில்லை. மீண்டும் புதிதாக புகார் எழுதி அந்த புகாருக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் கொடுத்த புகார் தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் தொடர்பான விபரங்களை போலீசார் சொல்லி நான் எழுதினேன். அந்த புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் கூறவிருந்த மேலும் சில தகவல்களை கூறவேண்டாம் என்று போலீசார் சொன்னதால் நான் விட்டுவிட்டேன். நான் கொடுத்த வீடியோ ஆதாரம் மற்றும் புகைப்பட ஆதாரங்களை போலீசார் ஏற்றுக்கொள்ளவில்லை. இறுதிவரை எனது அம்மாவை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை. என்னை புகார் கொடுத்தன்று விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தனர். எனது அம்மா பயன்படுத்தி செல்போனில் சம்பவத்தை எனது அண்ணி அன்புக்கரசி வீடியோ பதிவுசெய்தார் மற்றும் புகைப்படம் எடுத்தார். அதை கொடுத்தும் காவல்நிலையத்தில் பெற்றுக்கொள்ளவில்லை. அதை நான் தற்போது வைத்திருக்கிறேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்து குறியீடு செய்யவேண்டியிருப்பதால் கால அவகாசம் கோரியதன் அடிப்படையில் மு.வி. தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**